**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.329/2025
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : முருகேசன் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

17.07.2026
(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் கண்டிலான் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது ஊர்க்காரர் ஆவார். அசா.1 ஆறுமுகவேலுவை எனக்கு தெரியும் அவரும் எனது ஊர்க்காரர் ஆவார். இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 13.9.2025ம் தேதி இரவு 8.30 மணியளவில் ஆஜர் எதிரி அசா.1யை அசிங்கமாக திட்டி கண்ணத்தில் அடித்து காலால் மிதித்து தள்ளிவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆஜர் எதிரி தள்ளிவிட்டதால் அசா.1ன் முழங்காலில் ரத்த காயம் ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி பீர் பாட்டிலை எடுத்து அசா.1ன் வலது பக்க கண்ணத்தில் குத்தி அசா.1யை கீழே தள்ளிவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நானும், செந்தூர்பாண்டி என்பவரும் ஆஜர் எதிரியை விலக்கிவிட்ட போது ஆஜர் எதிரி பீர் பாட்டிலை அசா.1னிடம் காண்பித்து அசா.1யை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இளஞ்செம்பூர் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரி ஊர்க்காரர் என்பதால் கணம் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**

CC.No.329/2025
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : செந்தில்குமார் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

<u>17.07.2026</u>
(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).

**<u>முதல் விசாரணை :</u>**

**1)** நான் தற்போது இளஞ்செம்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்து முதற்கட்ட விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் திரு.போஸ் என்பவர் விருப்ப ஓய்வில் சென்றுவிட்டபடியாலும், புலன்விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் திரு.முகிழரசன் அவர்கள் பணிமாறுதலாகி சென்றுவிட்டபடியால், அவர்கள் என்னுடன் பணிபுரிந்த காரணத்தினால் அவர்களது கையொப்பம் நன்கு தெரியும் என்பதன் அடிப்படையிலும், ஆவணங்கள் அடிப்படையிலும் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 14.09.2025ம் தேதி காலை 06.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.போஸ் இளஞ்செம்பூர் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கண்டிலான் கிராமத்தை சேர்ந்த ஆறுமுகவேல், த.பெ.கொண்டனன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று காலை 09.00 மணிக்கு நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.82/2025 பிரிவுகள்

296(b), 115(2), 118(1), 351(3) BNS கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**2)** அவர் வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரவி மற்றும் முத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3)** பின்பு பட்டியல் சாட்சிகளான ஆறுமுகவேல், செந்தூர்பாண்டி, முருகேசன், ரவி மற்றும் முத்து ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரியை அன்றைய தினமே 12.00 மணிக்கு முனியன் கோவில் பேருந்து நிறுத்தம் அருகே வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

**4)** இவ்வழக்கில் காயம்பட்ட அசா.1 க்கு சிகிச்சை அளித்த முதுகுளத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.அனுகிரஹா என்பவரையும், இராமநாதபுரம் அரசு மருத்துவர் திரு.சுரேந்தர் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அரசு மருத்துவர் திரு.அனுகிரஹா என்பவர் அசா.1 க்கு அளித்த காயச்சான்றுதலுடன் கூடிய விபத்து பதிவேடுயையும் மற்றும் இராமநாதபுரம் அரசு மருத்துவர் திரு,சுரேந்தர் என்பவர் அசா.1 க்கு வழங்கிய காயச்சான்று பெற்றுள்ளார். மேற்படி **அசா.1 க்கு முதுகுளத்தூர் அரசு மருத்துவரால் வழங்கப்பட்ட காயச்சான்றுதலுடன் கூடிய விபத்து பதிவேடு அசா.ஆ.6 ஆகவும், அசா.1 க்கு இராமநாதபுரம் அரசு மருத்துவர் அளித்த காயச்சான்று அசா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

**5)** அத்துடன் வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS கீழ் இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

வாதி கொடுத்த பொய் புகாரை முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.